**ஒதுக்கீட்டுத் தலைப்பு 274 - அனுராதபுரம் மாவட்டச் செயலகம்**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2012 ஆம் ஆண்டு**

## 1. மாவட்டச் செயலகத்தின் பிரதான பணிகள்

(அ) வறுமைக் குறைப்பிற்கு மூலாதாரமாகவிருத்தல், விநியோகம் மற்றும் முகாமைத்துவம் என்பன.

(ஆ) இடர் நிவாரணம் மற்றும் புனரமைப்புச் செயற்திட்டங்களை நிர்வகித்தல்.

(இ) அபிவிருத்திச் செயற்திட்டங்களைத் திட்டமிடலும் நிர்வகித்தலும்.

(ஈ) தேர்தல் ஒருங்கிணைப்பு

(உ) மாவட்டச் செயற்திட்டங்களினது நிர்வாகமும் செயற்பாடும்.

(ஊ) வருமானச் சேகரிப்பு.

(எ) பிரதேச மட்டத்திலும் கிராம மட்டத்திலும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஸ்தாபனங்கள் மூலமாக அரசாங்க நடவடிக்கைகளை நடாத்துதல் மற்றும் சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

(ஏ) பிற அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் பிரதிநிதியாகச் செயற்படுதல்.

(ஐ) மாகாண சபைப் பணிகளுக்கு உதவியளித்தல்.

## 2. மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) கிழக்கு நுவரகம் பலாத
(ஆ) மத்திய நுகரகம் பலாத
(இ) தலாவ
(ஈ) கலென்பிந்துனுவெவ
(உ) மஹவிலச்சிய

(ஊ) ரம்பேவ

(எ) மிஹிந்தலை

(ஏ) பலாகல

(ஐ) நொச்சியாகம

(ஒ) இபலோகம

(ஓ) கல்னேவ

(ஔ) மதவாச்சி

(க) பதவிய

(கா) பலுகஸ்வெவ

(கி) ஹொரவ்பொதான

(கீ) கெபிதிகொல்லேவ

(கு) கெக்கிராவ

(கூ) கஹடகஸ்திகிலிய

(கெ) தம்புத்தேகம

(கே) சிராவஸ்திபுர

(கை) திரப்பனே

(கொ) ராஜாங்கனை

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

அனுராதபுரம் மாவட்டச் செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 திசெம்பர் 04 ஆம் திகதி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் கணக்கிணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறானவை.

## 1.4 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

ஒதுக்கீட்டுக் கணக்கும் கணக்கிணக்கக் கூற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பினது 148, 149, 150, 152 ஆகிய உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு ஏற்ப பேணப்படுதல், தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயபூர்வமாக சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களைக் கொண்டிராத கணக்குகளையும் கணக்கிணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல், நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடலும், அமுல்படுத்தலும் பேணிவருதலும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அனுராதபுரம் மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (உ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 1.6 முதல் 1.14 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் கீழே காட்டப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

பொறுப்புப் பதிவேடு நிதிப்பிரமாணம் 211

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 1,137,122,834 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதிவரையில் இதில் ரூபா 1,114,466,967 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய சேமிப்பு ரூபா 23,055,867 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய ஏற்பாட்டில் 2.03 சதவீதம் ஆகும். விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய ஏற்பாடுகள் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | |
| மீண்டுவருபவை | 470,975,000 | 599,822,834 | 3,784,880 | 0.63 |
| மூலதனம் | 61,100,000 | 537,700,000 | 19,270,987 | 3.58 |
| | 532,075,000 | 1,137,522,834 | 23,055,867 | 2.03 |

**(i) பாதீட்டு முரண்பாடு**

- ஒரு செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 25,000 மொத்தத் தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.
- 7 செலவின விடயங்களுக்காக மிகையேற்பாடு ஒதுக்கப்பட்ட காரணத்தினால் நிதியேற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 1,914,534 ஆக இருந்ததுடன் அது செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 6 சதவீதத்திற்கும் 58 சதவீதத்திற்குமிடையிலான வீச்சினைக் கொண்டுள்ளது.

**(ii) பிற அமைச்சுகளும் திணைக்களங்களும் வழங்கிய நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 17 அமைச்சுக்கள் மற்றும் 13 திணைக்களங்களினால் முறையே ரூபா 3,510,917,854 தொகையும் ரூபா 1,386,918,092 தொகையுமாக ரூபா 4,897,835,947 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடுகள் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதிவரையில் இதில் முறையே ரூபா 3,291,366,793 மற்றும் ரூபா 1,259,379,517 தொகைகளாக ரூபா 4,550,746,309 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் சேமிப்பு ரூபா 347,089,638 தொகை அல்லது கிடைத்த நிதி ஏற்பாட்டில் 7.09 சதவீதமாக இருந்தது. மேற்கூறப்பட்ட நிதியேற்பாட்டிற்கிடையே கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வியாபார அமைச்சிடமிருந்தும் தகவல் திணைக்களத்திடமிருந்தும் கிடைத்த நிதியேற்பாடுகளிலிருந்து 100 சதவீதமும், அரசாங்க பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சிடமிருந்தும் விவசாய அமைச்சிடமிருந்தும் மற்றும் கலாசாரத் திணைக்களத்திடமிருந்தும் கிடைத்திருந்த நிதியேற்பாடுகளிலிருந்து முறையே 57, 67 மற்றும் 96 சதவீதமும் சேமிக்கப்பட்டிருந்தன.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

விடய இலக்கம் 27401 இல் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **ஆகக்கூடிய எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக்கூடிய எல்லை** | **உள்ளவாறானது** |
| **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 60,000,000 | 46,558,642 | 40,000,000 | 62,660,296 | 215,000,000 | 159,045,708 |

27401 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குத் தொடர்பான 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,876,243 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகைள அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கட்டுநிதிக் கணக்கில் ரூபா 255,872 தொகையான வரவு மீதி 2013 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அந்த மீதியில் ரூபா 210,872 தொகை 2008 ஆம் ஆண்டு தொடக்கம் நிலவிவரப்பட்டிருந்தது.

**(உ) பொது வைப்புக் கணக்குகள்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாவட்ட செயலகம் மற்றும் 22 பிரதேச செயலகங்களின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 259,509,929 ஆக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 வருடங்களை விஞ்சிய ரூபா 10,636,845 தொகையான 27 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் நீர்ப்பாசன முகாமைத்துவ மற்றும் உள்நாட்டு வைத்திய அமைச்சின் கீழ் கிடைத்திருந்த நிதியேற்பாடுகளிலிருந்து செலுத்தப்பட்ட ரூபா 651,225 தொகையான முற்பணங்களிலிருந்து ரூபா 184,800 தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதி செயற்பாடுகள் முடிவடைந்து 69 நாட்கள் தொடக்கம் 231 நாட்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

## 1.6 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.6.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாண சபையின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்துவரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் மாவட்ட செயலகத்தினால் ஆண்டின்

ஆரம்பத்தின் போது தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அத்திட்டம் தயாரிக்கப்பட்டு 2013 மார்ச் 06 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.6.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

மேலே 1.6.1 இல் கூறப்பட்ட அரசாங்க நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு மற்றும் அதற்குப் பின்னரான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### (அ) செயற்பாடற்ற சொத்துக்கள்

(i) 5 பிரதேச செயலகத்திற்குரிய 5 வாகனங்கள் 5 வருட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ii) கல்னேவ பிரதேச செயலகத்தினால் பன்முகப்படுத்தப்பட்ட நிதியேற்பாட்டின் கீழ் பகிர்ந்தளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 58,800 பெறுமதியான பல்வேறு பொருட்கள் 2 வருடகாலமாக உரிய நிறுவனத்திற்கோ அல்லது நபர்களுக்கோ பகிர்ந்தளிக்கப்படாமல் செயற்பாடற்று களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்

கெக்கிராவ பிரதேச செயலகத்தின் ஒரு கட்டடம் 2009 ஆண்டு தொடக்கம் மாகாண விலங்கு வைத்திய மற்றும் விவசாய அமைச்சுக்கும் கெப்பித்திக் கொல்லாவ பிரதேச செயலகத்திற்குரிய 2 விடுதிகள் 2010 ஆம் ஆண்டு

தொடக்கம் சர்வதேச நிறுவனத்திற்கும் சிவில் பாதுகாப்புப் படையணிக்கும் முறையான அங்கீகாரமின்றி விடுவிக்கப்பட்டிருந்தன.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

(i) மாவட்ட செயலகத்தினால் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புகள் ரூபா 1,300,445 ஆக இருந்துதுடன் 01 வருடத்தை விட குறைவான காலத்தில் இருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக ஒதுக்கீட்டுக் கணக்குடன் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாத ரூபா 352,578 தொகையான பொறுப்புக் காணப்பட்டது.

(ii) 4 செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாட்டினை விஞ்சி ரூபா 1,120,826 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

## 1.8 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண அறிவுறுத்தல்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | |
| | 2009 மே 6 ஆந் திகதிய 1600/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் | 2,775,000 | இராஜாங்கனை மற்றும் கல்னேவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களுக்குரிய காணிகளில் கருங்கல் உடைத்தல் அடிப்படையில் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாதம் வரையான காலத்திற்காக அறவிடவேண்டிய அரசின் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | பொது நிர்வாக சுற்றுநிரூபம் | | |
| | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றுநிரூபத்தின் 2.1.1 ஆம் பந்தி | | மதவாச்சி பிரதேச செயலகத்தின் 2 வாகனங்கள், தமுத்தேகம, பலாகல, ஹொரொவப்பத்தான மற்றும் மஹவிலச்சிய பிரதேச செயலகங்களில் 01 வாகனத்தின் படியும் நொச்சியாகம பிரதேச செயலகத்தின் 2 வாகனங்களினதும் எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (iii) | பொது நிதிச் சுற்றுநிரூபம் | | |
| | நிதிப் பிரமாணம் 494(2) பிரகாரமும் 2013 சனவரி 17 | | கல்னேவ பிரதேச செயலகத்தின் மூலம் முத்திரை வழிமூலம் சேகரிக்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| ஆந் திகதிய பிஎப்/ஆர் ஈடி/முத்திரை/12 ஆம் இலக்க பொது பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | | வருமானம் பகிரப்படல் தொடர்பான அறிக்கை உரிய மாதிரிப் படிவத்தின் பிரகாரம் பொது நிதித் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(iv) ஏனைய சுற்றுநிரூபம்

---

| | | |
|---|---|---|
| 2011 யூன் 14 ஆந் திகதிய விவே/சுற்றுநிரூபம்/2011 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றுநிரூப கடிதத்தின் 2 ஆம் இலக்கம் | 1,384,759 | மதவாச்சி, ரம்பேவ, நொச்சியாகம, கெப்பித்திகொல்லாவ, ராஜாங்கனை, மிஹிந்தலை மற்றும் கெக்கிராவ போன்ற பிரதேச செயலகங்களில் செலுத்தப்படாத ஓய்வூதியம் தொடர்பாக சுற்றுநிரூபத்தின் பிரகாரம் உரிய மாதத்திற்கு பின்னரான மாதத்தின் போது மேலும் அது தொடர்பாக ஓய்வூதியக்காரர் விசாரணை செய்யாதுவிடில், அப்பணத்திற்காக ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் காசோலை ஒன்று வரையப்பட்டு பிரதான கணக்காளர் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் உரிய பிரதேச செயலகங்களில் கருத்தில் கொள்ளக்கூடிய காலதாமத்தின் பின்னர் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு உரிய பணம் அனுப்பப்பட்டிருந்தது. |
| 2007 ஒக்தோபர் 5 ஆந் திகதிய பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் கடிதம் | | கிராம உத்தியோகத்தர்களால் ஓய்வூதியக்காரர்கள் மற்றும் விதவைகள், அனாதைகள் நலனாளிகளின் பெயரேட்டினை பயன்பாட்டிங்கு எடுத்து மரணித்த நபர்கள் தொடர்பாக பிரதேச செயலாளருக்கு அறிவிக்க வேண்டி இருந்த போதிலும் அவ்வாறு அறிவிக்கப்படாமையால் மதவாச்சி |

பிரதேச செயலகத்தின் மரணித்த ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதியமாக ரூபா 175,684 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 1.9 செயற்திட்டத்தை அமுலாக்கலில் உள்ள நலிவுகள்

செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிட்டமை செயற்திட்டத்தை பூர்த்திசெய்யாது கைவிட்டமை செயற்திட்ட தாமதம் தொடர்பாக கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிட்டமை

6 பிரதேச செயலகங்களுக்குரிய மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 5,720,434 கூட்டுத்தொகையான 11 செயற்திட்டங்கள் 2012 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்டிருந்தன.

### (ஆ) செயற்திட்டத்தினை பூர்த்தி செய்யாது கைவிட்டமை

3 பிரதேச செயலகங்களுக்குரிய 8 செயற்திட்டங்களுக்காக ரூபா 6,859,333 தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டு அதில் ரூபா 3,093,630 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்ட காரணத்தினால் ரூபா 3,093,630 தொகை செயற்பாடற்ற செலவினத்திற்குட்பட்டிருந்தது.

### (இ) கருத்திற் கொள்ளக்கூடிய கால தாமதத்துடன் உள்ள செயற்திட்டங்கள்

தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சிக்கு ஏதுவாக நிரந்தர கூரையற்றவர்களுக்கு ஓடுகள் வழங்குவதற்காக 2011/2012 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் நொச்சியாகம் பிரதேச செயலகப் பிரிவில் 13 கிராம சேவகர் பிரிவுகளில் 406 வீடுகளுக்கு ஓடுகள்

வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் 75 வீடுகள் அளவில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஓடுகள் கூரைக்குப் போடப்பட்டிருக்கவில்லை.

## 1.10 செயலாற்றல்

2012 ஆம் ஆண்டின் பாதிடப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) போதிய அளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

#### (i) வருமானங்கள் சேகரிக்கப்படாமை

10 பிரதேச செயலகங்களின் மூலம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சேகரிக்கப்பட வேண்டிய காணி வாடகை வருமானம், வாகன அனுமதிப்பத்திர வருமானம் மற்றும் கருங்கல் உடைத்தலின் அடிப்படையில் அறவிடவேண்டிய அரசாங்கக் கட்டணம் முறையே ரூபா 5,515,602, ரூபா 50,375,463 மற்றும் ரூபா 3,299,370 தொகை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### (ii) துப்பாக்கி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாமை

1996 இன் 22 ஆம் இலக்க துப்பாக்கி கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவில் 3 ஆம் உபபிரிவின் பிரகாரம் அனுராதபுரம் மாவட்டத்தில் விநியோகிக்கப்பட்ட மொத்த துப்பாக்கி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 1700 ஆக இருந்தது. 1988 தொடக்கம் 2012 வரையான காலத்தில் விநியோகிக்கப்பட்ட 269 துப்பாக்கிகளின் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படாமை தொடர்பாக முறையான விசாரணை மேற்கொண்டு அந்த அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கோ அல்லது நிலுவை வருமானமான ரூபா 69,900 தொகையை தண்டப் பணத்துடன் அறவீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**"கிரிவீதுறு" வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்**

2008 பெப்ரவரி 13 ஆந் திகதிய 2008/1 ஆம் இலக்க சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் காப்பு அமைச்சின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 24 மாதத்திற்கும் 60 மாதத்திற்கும் இடைப்பட்ட வயதுத் தொகுதியிலுள்ள பின்ளைகளுக்காக பால் கோப்பையொன்றை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 11 பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்ட 384 முன்பள்ளிப் பாடசாலைகளில் 225 முன்பள்ளிப் பாடசாலைகளில் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. 159 முன்பள்ளிப்பாடசாலைகளில் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(iii) ஜீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன் பணத்தை அறவிடல்**

2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்தப்பட்ட ஜீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நலனாளிகளிடமிருந்து 50 சதவீதத்தை அறவிடும் நிபந்தனையின் அடிப்படையில் 23 பிரதேச செயலகப் பிரிவுகளில் ஜீவனோபாய அபிவிருத்தி செயற்திட்டக் கடனாக ரூபா 127,040,321 தொகை வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கடன் பணத்தில் 2013 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரையிலும் ரூபா 33,550,022 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. கடன் பணம் வழங்கப்பட்டு 06 மாதங்களில் அந்தக் கடன்பணம் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரை மீள அறவிடப்படவேண்டிய கடன் பணத்திலிருந்து 26 சதவீதம் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தமையினால் நிலுவைக் கடனை அறவீடு செய்தலில் முறையான திட்டமொன்று காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

## 1.11 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு

### செயற்பாடற்ற வங்கிக் கணக்கு

2012 ஆம் ஆண்டில் ஓயாமடுவ தேசத்திற்கு மகுடம் கண்காட்சி நடவடிக்கைகளுக்காக பல்வேறு நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 42,638,583 தொகை வங்கி நடைமுறைக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்த போதிலும் 2013 ஆகஸ்ட் மாதம் வரையிலும் அந்தப் பணம் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 1.12 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்டச் செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாகக் காணப்பட்டன. தெரிவுப் பரிசோதனைகளின் போது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) தேசத்திற்கு மகுடம் கண்காட்சி நிலத்தில் கடற்கரை மணல் விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்காக தனியார் கம்பனி ஒன்றினால் 300 கியூப் மணல் வழங்கப்படுவதற்காக ரூபா 3,449,600 தொகை கோரப்பட்டிருந்தது. அதற்காக ஒரு கியூப் மணலுக்கு ரூபா 11,200 படி 198 கியூப் கடல் மணல் வழங்கலுக்காக ரூபா 2,217,600 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2013 செப்தெம்பர் 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது விளையாட்டு மைதான நிலத்தில் 86 கியூப் மணல் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கம்பனிக்கு 112 கியூப் மணலுக்காக ரூபா 1,254,400 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை திட்டமிடும் போது அதில் நிர்மாணிக்கப்பட்ட கண்காட்சிக் கட்டிடங்கள் 2011 நவம்பர் 29 ஆந் திகதிய

எம்எப்5/7/தெயட்ட/கே/2012 ஆம் இலக்க நிதி திட்டமிடல் அமைச்சின் கடிதத்தின் பிரகாரம் நிரந்தரக் கட்டிடமாக இருக்க வேண்டியிருந்ததுடன் அந்தக் கட்டிடம் அரசாங்க நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்த வேண்டியிருந்தமை தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 செப்தெம்பர் 23 ஆந் திகதி வரையிலும் 03 பிரதான கண்காட்சிக்கூடங்களும் விலங்குகளின் பட்டியாக பயன்படுத்துவதற்கு நிர்மாணிக்கப்பட்ட 08 கட்டிடங்களும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(இ) மஹவிலச்சி பிரதேச செயலகத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் உடைந்து விழும் நிலையில் காணப்பட்டமையினால் அதனை புனர்நிர்மாணம் செய்ய வேண்டியிருந்த போதிலும் கட்டிடம் மிகவும் ஆபத்தான நிலையில் காணப்பட்டது. பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள் அதற்கண்பித்த சிறிய கட்டிடத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும் அலுவலக நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய வசதிகளுடன் ஓயாமடுவ கண்காட்சி வளவில் அமைந்துள்ள செயற்பாடற்றுக் காணப்படுகின்ற பொருத்தான கட்டிடத்திற்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஒரு கிராமத்திற்கு ஒருவேலை செயற்திட்டத்தின் கீழ் மஹவிலச்சி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகத்திற்குரிய கரம்பகொல்லேவ கிராமத்திலுள்ள பழமைவாய்ந்த வயலின் விளைச்சலுக்காக நிதியேற்பாட்டைப் பெற்று 2012 திசெம்பர் 04 ஆந் திகதி வரையில் ரூபா 757,047 தொகை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. பௌதீகக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட படி உரிய வயலின் விளைச்சல் முடிவடைந்திருந்த போதிலும் விவசாயிகளுக்கு அந்த வயலை சட்டரீதியாக வழங்காதிருந்தமையினால் இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) நொச்சியாகம பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பஹமுனே தொடக்கம் காலதிவுல்வெவ வீதியில் மழை நீரை வழிந்தோடச் செய்வதற்கான வடிகால் நிர்மாணிப்பதற்கு ரூபா 1,000,000 தொகை ஒரு கிராமத்திற்கு ஒருவேலை செயற்திட்டத்தின் நிதியேற்பாட்டின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தில் 70 அடி நீளமான வடிகாலுக்கு

கொங்கிரீட் இடுவதற்கு மேலாக பயன்பாடுள்ள வேலைப் பகுதியொன்று நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அதற்காக ரூபா 979,177 தொகை செலவிடப்பட்டிருந்தது. வேலை அளவிடைப் பத்திர இல. 05 இன் பிரகாரம் ரூபா 376,300 தொகை செலவிடப்பட்டு நீர் வழிந்தோடச் செய்வதற்காக வடிகால் வெட்டி மண்ணை அகற்றுவதற்காக வேலை அளவீட்டுப் பத்திர இல. 07 இன் பிரகாரம் ரூபா 60,400 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட மண்ணை வெட்டிக் கொண்டு சென்று நிரப்பப்பட்டிருக்கவும் இல்லை.

(ஊ) மஹவிலச்சி பிரதேச செயலகத்தின் அதிகாரப் பிரதேசத்திறகுரிய சிவலாப்பிட்டிய கிராம மக்களின் பயன்பாட்டிற்காக ‘‘பிளேன் ஸ்ரீலங்கா செயற்திட்டம்’’ மூலம் கிராம மக்களின் ஊழியப் பங்களிப்புடன் நீர்த்தாங்கியும் கிணறும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த நீர்த்தாங்கிக்கு தண்ணீரை வழங்குவதற்கான பம்பியை இயக்குவதற்காக கிராமத்திற்கு கிடைக்கின்ற மின்சாரம் போதியளவில் இல்லாமையினால் அதனை அமுல்படுத்த முடியாதிருந்த வேளையில் மின்சார இணைப்பை நாளதுவரையாக்காமல் ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை செயற்திட்டத்தின் கீழ் நீர்த்தாங்கி மற்றும் கிணற்றைச் சுற்றி வேலி நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட ரூபா 829,021 தொகை செயற்பாடற்ற செலவினமாக இருந்தது.

(எ) கெக்கிராவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திற்குரிய நாவற்குளம் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நீர்த்தாங்கிக்காக ரூபா 1,000,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை செயற்திட்டத்தின் கீழ் ரூபா 973,378 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த செயற்திட்டத்தின் நீர்த்தாங்கிக்காக ஈடுபடுத்தப்பட்ட இரும்பு துருப்பிடித்திருந்தமையினால் செயற்திட்டம் கைவிடப்படக்கூடிய நிலைக்கு உள்ளாகியிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலவிடப்பட்டிருந்த ரூபா 1,973,378 தொகையும் செயற்பாடற்ற செலவினமாக இருந்தது.

## 1.13 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதுநிருவாக அமைச்சிற்குரிய அநுராதபுரம் மாவட்டச் செயலகத்தினால் நிருவகிக்கப்பட வேண்டிய 14 உத்தியோகபூர்வ இல்லங்கள் வடமத்திய மாகாண சபைக்குரிய உத்தியோகத்தர்கள் வாழ்ந்து வருவதுடன் அந்த இல்லங்களின் வாடகை அறவீடு மற்றும் உரிய காலத்தின் பின்னர் மீளக்கையளித்தல் என்பன முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த இல்லங்கள் தொடர்பாக முறையாக தரவுகளும் மாவட்ட செயலகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. பொது நிருவாக அமைச்சிற்குரிய இந்த சொத்துக்களை முறையாகக் கட்டுப்படுத்துவதற்கோ அல்லது ஆதனவரி செலுத்துதல், பராமரிப்பு, கையளித்தல் மற்றும் வாடகை அறவிடுதல் தொடர்பாக முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திறைசேரி நானாவித முற்பணக் கணக்கின் கீழ் கொள்வனவு செய்வதற்காக 2001, 2004/2005 மற்றும் 2005/2006 ஆம் ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட ரூபா 399,870,050 தொகையான முற்பணங்களிலிருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 78,274,586 தொகையான மீதியைப் பதிவழிப்பதற்காக 2011 யூன் 21 ஆந் திகதிய அரசாங்க கணக்குகள் குழுவினால் வழங்கப்பட்ட கட்டளை 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) அநுராதபுரம் மாவட்டத்தில் மத்திய அரசின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற 27 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் அநுராதபுரம் மாவட்ட செயலகக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அரசாங்க நிறுவனங்களை இணைப்பதற்காக அவசியான உள்ளக தொலைபேசி முறைமையொன்று மாவட்ட செயலகத்தில் காணப்படாமையினால் இந்த அரசாங்க நிறுவனங்களைத் தொடர்பு கொள்ளும் போது சிக்கல் நிலை காணப்பட்டது.

**(ஈ) கோழிக் குஞ்சுகளைப் பகிர்ந்தளித்தல் - மிருகவள மற்றும் மீன்பிடி அமைச்சு**

2012 யூன் 07 ஆந் திகதி மதவாச்சி பிரதேச செயலகப் பிரிவில் நலனாளிகளுக்காக 975 கோழிக் குஞ்சுகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 399,750 தொகை மாகாண பணிப்பாளர் விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு (வடமத்திய மாகாணம்) செலுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய கோழிக் குஞ்சுகளில் 760 இற்கு மாத்திரம் பணம் செலுத்தி 3½ மாதங்களின் பின்னர் அதாவது 2012 ஆகஸ்ட் 29 ஆந் திகதி கிடைத்திருந்தது.

## 1.14 மனிதவள முகாமைத்துவம்

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 72 | 52 | 20 |
| (ii) | மூன்றாம் நிலை | 45 | 16 | 29 |
| (iii) | இரண்டாம் நிலை | 1347 | 1090 | 257 |
| (iv) | ஆரம்ப நிலை | 255 | 196 | 59 |
| | மொத்தம் | 1719 | 1354 | 365 |

மீளாய்வாண்டின் இறுதிவரையில் காணப்பட்ட 365 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.